**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>OS No.99/2016</u>**

<u>முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்சி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பில் இரண்டாவது (PW2) சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சண்முகம் | தந்தை பெயர் | : திரு.முத்தையன் |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 16.03.2026

**P.W. : 2**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். நான் இத்துடன் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளவும்.

1. கடந்த 21.10.2013 ம் தேதி எனக்கும் திரு.ராஜராஜன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் **வா.த.சா.ஆ.19** ஆகும்.

MADURAI BENCH? — HIGH COURT, TRICHY

**<u>1 பி.வா.த.கு.வி :</u>**

| | |
|---|---|
| **கேள்வி** | வா.த.சா.ஆ.19 ல் உள்ள ராஜாராஜன் என்பவர் இந்த வழக்கு 1 வது பிரதிவாதியின் பிருந்தா என்பவரின் கணவர்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இராஜாராஜன் திருமணமான 34 வது நாளில் இருதைய அடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்துவிட்டார்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இராஜாராஜனுக்கு பிறகு 1 வது பிரதிவாதி தான் கடையை நடத்தி வந்தார் என்றால்? |
| **பதில்** | இல்லை. முதலில் இராஜாராஜனின் அண்ணன் சரவணன் 1 வது வாதி நடத்தினார். பிறகு பிருந்தா நடத்தினார். |
| **கேள்வி** | உங்களுடைய முதல் விசாரணையில் சரவணன் பற்றி சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | உங்களுக்கும் 1 வது பிரதிவாதிக்கும் இடையே கடை சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால்? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | 1 வது வாதி சொல்லிதான் சாட்சி சொல்ல வந்துள்ளீர்கள் என்றால்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | 1 வது வாதி சரவணன் அரசு கால் நடை மருத்துவர் என்றால்? |
| **பதில்** | ஆம். ஸ்ரீரங்கம் அரசு கால் நடை மருத்துவ மனையில் பணி புரிகிறார். |
| **கேள்வி** | வா.த.சா.ஆ.19 ஏற்பட்ட சமயத்தில் இராஜராஜன் திருமணம் நடந்துவிட்டது என்றால்? |
| **பதில்** | ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது இராஜாரஜனுக்கு திருமணம் ஆகவில்லை. |
| **கேள்வி** | உங்களுக்கு எழுத படிக்க தெரியாது என்ற சங்கதியை இந்த வழக்கில் சொல்லி உள்ளீர்களா? |
| **பதில்** | இல்லை. |

MADURAI BENCH OF MADRAS HIGH COURT

(இருதரப்பும் கேட்டு கொண்டதற்கு இணங்க வழக்கு சம்பந்தமான பிரச்சனையை சுமூகமாக பேசி தீர்ப்பதற்காக 24.03.2026 அன்று விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 16.03.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,
இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி: 16.03.2026

III ADJ COURT, TRICHY